**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண். 5864/அ1/2025 நாள். 01.12.2025**

---

**பொருள் :-** பள்ளிக் கல்வி - தமிழ்நாடு அமைச்சுப்பணி - பள்ளிக் கல்வித் துறையின் கீழ் செயல்படும் அனைத்து அலுவலகங்கள், அரசு / நகராட்சி உயர், மேல்நிலைப் பள்ளிகள், ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் – ஆசிரியரில்லாத பணியாளர்களின் விபரங்கள் கோருதல் – சார்பு.

**பார்வை :-** தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள், சென்னை-6, ந.க.எண்.26220/அ3/இ1/2025 நாள்.24.11.2025

..........

ஆசிரியரல்லாத பணியாளர்களின் அடிப்படை தகவல்களை அவ்வப்போது கைபேசி மூலமாக மாவட்டங்களில் கோரும் நிகழ்வை குறைக்கும் பொருட்டு, பள்ளிக் கல்வி இயக்ககத்தின் கீழ் செயல்படும் அனைத்து அலுவலகங்கள், அரசு / நகராட்சி உயர், மேல்நிலைப் பள்ளிகள். ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் ஆசிரியரில்லாத பணியாளர்களின் (Regular time Scale) பணி சார்ந்த விபரங்களை இணைப்பில் காணும் Excel படிவத்தில் பூர்த்தி செய்து பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களால் கோரப்பட்டுள்ளது.

ஏற்கனவே முதன்மைக் கல்வி அலுவலர்களிடமிருந்து பெறப்பட்ட விவரங்களில் பிறந்த தேதி உள்ளிட்ட அனைத்து வகையான தேதிகளும் (DD-MM-YYYY) என்ற அடிப்படையில் இல்லாமல் (MM-DD-YYYY) என்றும், பெரும்பாலான கைபேசி எண்கள் 9 இலக்கம், 11 இலக்கம் என்றும், ஓய்வு பெறும் தேதியினை பிறந்த தேதி அடிப்படையில் கணக்கிடாமல் பொறுத்தமற்ற மாதம், வருடத்தினை குறிப்பிட்டும், மாதத்தின் முதல் தேதி பிறந்தவருக்கு முந்தைய மாதத்தின் கடைசி தேதியினை குறிப்பிடாமல் தொடர்பில்லாத ஓய்வு, IFHRMS Employee Code, Post Code, GPF No, CPS No, பூர்த்தி செய்யாமல் விடுதல் போன்ற பல்வேறு குறைபாடுகள் காணப்பட்டது.

எனவே, தற்போது அனுப்பிவைக்கப்படும் படிவத்தில் எவ்வித குறைபாடுகளும் இல்லாமல் சம்பந்தப்பட்ட ஆசிரியரல்லாத பணியாளரின் பணிப்பதிவேடு. ஆணைகள், ஆவணங்களின் அடிப்படையில் தயார் செய்ய தங்களது சார்நிலை அலுவலர்களுக்கு உரிய அறிவுரை வழங்கி மாவட்டத்தில் பள்ளிக் கல்வி இயக்ககத்தின் கீழ் வரும் எந்தவொரு ஆசிரியரல்லாத பணியாளரின் பெயரும் விடுபடாமல் துல்லியமாக தயார் செய்து ஒரே Excel கோப்பாக அனுப்பிவைக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது. (All entries in Capital Letters. Initial end of the Name) (Don't merge Columns and cells, No. insert Column and Cell) தகவல்களை உள்ளீடு செய்யும் முன்னர் கணினியில் (DD-MM-YYYY) என்ற முறையில் Date Settings

செய்துகொண்டு உள்ளீடு செய்திட பார்வையில் காணும் கடிதத்தில் வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளதால் அவ்வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தினை 05.12.2025 -க்குள் பூர்த்தி செய்து இவ்வலுவலக மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி அதன் நகலினை இவ்வலுவலகத்தில் ஒப்படைக்க சம்மந்தப்பட்ட அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேற்படி பொருள் சார்பாக இத்துடன் இணைக்கப்பட்டுள்ள கூகுள் படிவத்தில் 05.12.2025 -க்குள் உள்ளீடு செய்திட அனைத்து அரசு / நகராட்சி உயர் / மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**இணைப்பு :**

உரிய படிவம்.

**// ஒப்பம் //**

**முதன்மைக் கல்வி அலுவலர்,**

**வேலூர்.**

**பெறுநர்,**

1. முதன்மைக் கல்வி அலுவலர் ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி அவர்களுக்கு கனிவுடன் அனுப்பலாகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை/ தொடக்கக் கல்வி/ தனியார் பள்ளிகள்) வேலூர்.
3. உடற்கல்வி ஆய்வாளர் , வேலூர்.
4. அரசு / நகராட்சி / உயர்/ மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள்

**நகல்:-**

1. சென்னை-06, பள்ளிக் கல்வி இணை இயக்குநர்(பணியாளர் தொகுதி) அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
2. கோப்பிற்கு

(பா.க)